[எல்லா விடைகளும் **பாடப்பகுதியை ஒட்டியே** அமைய வேண்டும்]

## பாகம் - ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று : கவிதை

நாள்பொழு தெலாம்உன் அன்பொலி
நல்வழிக்கு என்னை அழைத்திடும்
நாள்பொழு தெலாம்உன் அன்புளம்
நம்பிக் கையின்மகிழ் வூட்டிடும்!

நாள்பொழு தெலாம்அன் புறவுதான்
நலமும் வலுவும் தந்திடும்;
நாள்பொழு தெலாம்உன் அன்புயிர்
**கணந்தொறும்** வாழ உதவுமே!

***த.கோவேந்தன்***

1 இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **பாடுபொருள்** யாது?

[2 புள்ளி]

2 இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **நயங்கள்** இரண்டனை எழுதுக.

[4 புள்ளி]

3 i) **கணந்தொறும்** என்பதன் பொருள் யாது?

[2 புள்ளி]

நாள்பொழு தெலாம்உன் அன்பொலி
நல்வழிக்கு என்னை அழைத்திடும்
நாள்பொழு தெலாம்உன் அன்புளம்
நம்பிக் கையின்மகிழ் வூட்டிடும்!

.

ii) ஒவ்வொரு நாளும் நாம் கேட்கின்ற இனிமையான அன்புமொழியால் விளையும் **நன்மை** யாது?

[2 புள்ளி]

[10 புள்ளி]

Selamat mengulangkaji dari telegram@soalanpercubaanspm



CamScanner

## பிரிவு இரண்டு : நாடகம்

4 பிசிராந்தையார் நாடக ஆசிரியர் மேற்கொண்ட **தொழில்** ஒன்றனைக் குறிப்பிடுக. [2 புள்ளி]

5 i) பிசிராந்தையாரின் பேரனின் **இயற்பெயரைக்** குறிப்பிடுக. [2 புள்ளி]

ii) பிசிராந்தையார் நாடகத்தில் இடம்பெற்றுள்ள **சமுதாயப் பின்னணி** ஒன்றனைக் குறிப்பிடுக. [2 புள்ளி]

6 கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | | |
|---|---|---|
| ஒற்றன் | : | அயலரசின் செய்தி கொண்டு வந்தாரை ஒன்றும் செய்ய மாட்டீர்கள் என்று நம்பியதால் இப்பணியை நான் மேற்கொண்டேன். இது கோப்பெருஞ் சோழன் அளித்தது. *(என்று திருமுகத்தைப் பாண்டியனிடம் நீட்டப் பாண்டியன் வாங்கிப் படிக்கிறான்)* . |
| அரசன் | : | அறமிலாப் பாண்டியன் அறிவுடை நம்பிக்குக் கோப்பெருஞ் சோழன்: அறமில்லை, ஆட்சித் திறமில்லை உம்மிடத்தில்! அறிவில்லை, நல்ல நெறியில்லை உன்பால்! நிலை தவறிற்று; கொலை பெருகிற்று நின்நாட்டில்! உன் ஆட்சியை என்னிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையானால் போருக்கு வருக. எல்லைக்கண் படையோடு நிற்கின்றேன்.” |
| பாண்டியன் அறிவுடை நம்பி | : | நானும் படையுடன் இதோ வந்துவிட்டேன். இழித்துப் பேசிய சோழன் வாயைக் கிழித்துப் பேசிய சோழன் வாயைக் கிழித்துப் போடுகின்றேன். இதையும் சொல் போ! *(ஒற்றன் ஓடுகின்றான்)* படைத்தலைவரே, நம் படை முழுவதும் திரட்டுக விரைவில்! **எல்லையில் கால் வைக்குமுன்** நாம் எதிர்த்துத் தாக்க வேண்டும். அமைச்சரே, தெருத்தோறும் கோப்பெருஞ்சோழ உருவத்தை வைக்கோலால் புனைந்து நிறுத்தும்படி செய்க. கோப்பெருஞ்சோழன் மேல் நமக்குள்ள வெறுப்பைக் காட்ட அப்புல்லுருக்களில் தீ வைக்க இதோ நான் பிசிருக்குப் போய் வந்துவிடுகின்றேன். (போதல்) |

**(காட்சி 24, பக்கம் 103)**
**(உமா பதிப்பகம், 2020)**

i) இச்சூழலில் வெளிப்படும் பாண்டியன் அறிவுடை நம்பியின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. [2 புள்ளி]

ii) இச்சூழலில் காணப்படும் **உத்திமுறை** ஒன்றனைக் குறிப்பிடுக. [2 புள்ளி]

iii) **‘எல்லையில் கால் வைக்குமுன்’** என்னும் சொற்றொடருக்குச் சூழலுக்கேற்ற பொருள் எழுதுக. [2 புள்ளி]

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? [3 புள்ளி]

[15 புள்ளி]



CamScanner

## பிரிவு மூன்று : நாவல்

7 வாடா மலர் நாவலாசிரியர் கடைப்பிடித்த **கொள்கையைக்** குறிப்பிடுக.
[2 புள்ளி]

8 i) வாடா மலர் நாவலில் சுடர்விழியின் **கணவர் பெயரைக்** குறிப்பிடுக.
[2 புள்ளி]

i) வாடா மலர் நாவலின் **மொழிநடை** ஒன்றனைக் குறிப்பிடுக.
[2 புள்ளி]

9 கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> "உங்களுக்குக் கடையை பிரித்துக் கொடுத்தது போல், ஒரு வீடு பார்த்துத் தனிக்குடித்தனம் வைத்துக் கொடுத்தால் எவ்வளவு நான்றாக இருக்கும்! படித்தவர் நீங்கள். உங்களுக்கு இது தெரியாதா? அங்கங்கே எப்படி வாழ்கிறார்கள்! நாங்கள் உங்கள் அம்மா அப்பாவைப் பற்றி ஏதோ குறை சொல்வதாக எண்ணிவிடாதீர்கள். **நாங்கள் அப்படிப் பட்டவர்கள் அல்ல.** ஒரு நாளும் அந்த வழிக்குப் போக மாட்டோம். உங்கள் நன்மைக்குத்தான் சொல்கிறேன்" என்று மெல்லத் திட்டத்தைப் புலப்படுத்தினார். அதன் பிறகுதான் எனக்குக் காரணம் புலப்பட்டது. மகள் பூங்கொடியை என்னிடம் நெருங்கவிடாமல் செய்ததும் அந்தத் திட்டத்தில் ஒரு பகுதிதான் என்று உணர்ந்தேன்.
>
> "ஏன்? எங்கள் வீட்டில் பூங்கொடிக்கு ஏதாவது குறை நடந்ததா? எனக்கு அண்ணன், தம்பி, அக்கா, தங்கை யாராவது இருந்து ஏதாவது கொடுமை செய்தார்களா? மாமியின் கொடுமை உண்டா? அப்படி ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். போங்கொடி சொல்லட்டும், கேட்கலாம்" என்றேன்.
>
> (**அத்தியாயம்** 18, **பக்கம் 139** )
> **மல்டி எடுகெஷ்னல் புக் எண்டபிரஸ் 2020**

i) இச்சூழலில் வெளிப்படும் குழந்தைவேல் மாமியாரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக.
[2 புள்ளி]

ii) இச்சூழலில் காணும் **சமுதாயப் பின்னணியைக்** குறிப்பிடுக்க. [2 புள்ளி]

iii) "**நாங்கள் அப்படிப் பட்டவர்கள் அல்ல"** எனும் சொற்றொடருக்குச் சூழலுக்கு ஏற்ற பொருள் எழுதுக. [2 புள்ளி]

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? [3 புள்ளி]

[15 புள்ளி]



CamScanner

# பாகம் இரண்டு

கீழ்க்காணும் **மூன்று பிரிவுகளுள்** ஒவ்வொரு பிரிவிலிருந்தும் **ஒரு கட்டுரையாக மூன்று கட்டுரை எழுதுக** .

## பிரிவு ஒன்று - கவிதை

## காவியமும் ஓவியமும்

எழுத வேண்டுமென் றுணர்வு தூண்டப்
படிப்பறை சென்று பற்றினேன் தூவல்;
பழந்தாள் பொறுக்கிப் படியச் செய்தே
உணர்வுக் கலவையை ஓட விட்டேன்;
என்னை மறந்தே எழுதும் வேளையில்

ஏதோ ஒன்றென் உடலில் உரசும்
உணர்வு தோன்றினும் உளந்திருப் பாமல்
பாட்டாய்க் கனிந்து படைத்த வேளையில்
பாட்டுத் தேனைப் பாய்ச்சிய தூவல்
பறிபோ யிற்றுப் பதறி எழுந்தேன்!
புத்தம் புதிய புத்தகத் தினிலே
என்னிடம் பறித்த எழுது கோலால்
என்மகன் ஏதோ எழுத லுற்றான்!
காற்றோடு காற்றாய்க் கடலொடு கடலாய்ப்
பூவொடு பூவாய்ப் புனலொடு புனலாய்
ஒன்றிப் பாட்டாய் உணர்வின் எல்லையில்
நின்றிவ் வுலகை மறந்த வேளையில்
பிள்ளைப் பாசமா பிறக்கும்? உடனே
விரைந்து நூலை வெடுக்கெனப் பிடுங்கினேன்;
தூவலைப் பற்றித் தொடர்ந்தேன் பணியை.
வெம்பிய மகன்குரல் விழுந்தது செவியில்
மனமோ படைப்பின் வழியில் நடந்ததால்
மகனின் குரலோ மங்கித் தேய்ந்தது.
உணர்வு முற்றும் உருவங் கொண்டதும்
உற்ற பெருமிதம் உரைத்தல் கூடுமோ?
உலகெலாம் கையில் ஒடுங்கிய மகிழ்வில்
படைத்தஎன் பாட்டைப் படிக்கத் தொடங்கினேன்.
‘அத்தான்’ என்றொரு குரல்செவி மேவத்
திரும்பிப் பார்த்தேன்; மனையாள் ஆங்கே,
“உங்கள் திருமகன் உயர்கை வண்ணம்
பாரும்!” என்று பல்லெல்லாம் தெரியச்
சிரித்து நின்றாள்; திரும்பினேன்! அடடா!

எந்தக் கலைஞனும் எழுதிட முடியா
ஓவியக் காட்சிகள் ஒளிர்ந்தன சுவரில்!
அடுப்புக் கரியுடன் அருமை மகன்தான்
ஆங்கே அருங்கலை மணிபோல்
தேங்கும் மகிழ்ச்சி சிறக்கநின் றனனே!

**-கவிஞர் த.கோவேந்தன்**

10 மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளைத்** தொகுத்து எழுதுக
[20 புள்ளி]

**அல்லது**

11. கீழ்க்காணும் கவிதையை வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**சூரியன் வருவது யாராலே?**

சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவதும் எவராலே?
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணிற் படுவன அவை என்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வதும் எவராலே?
யாரிதற் கெல்லாம் அதிகாரி?
அதை நாம் எண்ணிட வேண்டாவோ?

தண்ணீர் விழுந்ததும் விதையின்றித்
தரையில் முளைத்திடும் புல்ஏது?
மண்ணில் போட்டது விதையொன்று
மரஞ்செடி யாவது யாராலே?
கண்ணில் தெரியாச் சிசுவையெல்லாம்
கருவில் வளர்ப்பது யார்வேலை?
எண்ணிப் பார்த்தால் இதற்கெல்லம்
ஏதோ ஒருவிசை இருக்குமன்றோ?

எத்தனை மிருகம்! எத்தனைமீன்!
எத்தனை ஊர்வன பறப்பனபார்!
எத்தனை பூச்சிகள் புழுவகைகள்!
எண்ணத் தொலையாச் செடிகொடிகள்!
எத்தனை நிறங்கள் உருவங்கள்!
எல்லா வற்றையும் எண்ணுங்கால்
அத்தனை யும்தர ஒருகர்த்தன்
யாரோ எங்கோ இருப்பதுமெய்.

அல்லா வென்பார் சிலபேர்கள்;
அரன் அரி யென்பார் சிலபேர்கள்;
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை யென்பார்கள்;
சொல்லால் விளங்கா 'நிர்வாணம்'
என்றும் சிலபேர் சொல்வார்கள்;
எல்லா மிப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே!

அந்தப் பொருளை நாம்நினைத்தே
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்
எந்தப் படியாய் எவர்அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?

Selamat mengulangkaji dari telegram@soalanpercubaanspm
KST Johor 2023



நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம் அதை வணங்கிடுவோம்;
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

***நாமக்கல் கவிஞர்***
***வெ.இராமலிங்கம் பிள்ளை***

i) இக்கவிதையில் கவிஞர் கையாண்டிருக்கும் **அணி நயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக .

[10 புள்ளி]

ii) இக்கவிதை உமக்குள் ஏற்படுத்திய **படிப்பினை** மூன்றனை விளக்கி எழுதுக.

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

12. (அ) பிசிராந்தையார் நாடகத்தில் பிசிராந்தையாரின் **பாத்திரப்படைப்பை** மூன்றனை விளக்கி எழுதுக.

[10 புள்ளி]

(ஆ) பிசிராந்தையார் நாடகத்தின் **கதைப்பின்னல் கூறுகள்** மூன்றனை விளக்கி எழுதுக.

[10 புள்ளி]

**அல்லது**

13 (அ) பிசிராந்தையார் நாடகத்தில் இளங்கோச் சோழனின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக.

[10 புள்ளி]

(ஆ) பிசிராந்தையார் நாடகத்தின் **இடப்பின்னணி** மூன்றனை விளக்கி எழுதுக.

[10 புள்ளி]

## பிரிவு மூன்று : நாவல்

14 வாடா மலர் நாவல் உமக்குள் ஏற்படுத்திய **தாக்கத்தை** விளக்கி எழுதுக.

[20 புள்ளி]

**அல்லது**

15 வாடா மலர் நாவலின் பெண் கதைப்பாத்திரங்கள் மூலம் நாம் பெறும் **படிப்பினைகளை** விளக்கி எழுதுக.

[20 புள்ளி]

## தேர்வுத்தாள் முடிவுற்றது
**KERTAS PEPERIKSAAN TAMAT**



CamScanner